மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 08 வெள்ளிக்கிழமை 21.06.2024 கதிர் 280

# இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே இங்கு வந்தார்

## விமல் வீரவன்ச எம்.பி. சபையில் தெரிவிப்பு



**“இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் நேற்று (20) ஒரு சில மணித்தியாலங்களுக்கு இலங்கைக்கு வந்து சென்றுள்ளார். இலங்கையில் சிறப்பு டிஜிட்டல் அடையாள அட்டை முறை அறிமுகமாகவுள்ளதால், குறித்த டிஜிட்டல் அடையாள அட்டைகளை தயாரித்தல் உட்பட மின்சார ஒப்பந்தம் ஒப்பந்தம் ஆகியவற்றை அதானிக்கு வழங்குவது உள்ளிட்ட 10 அல்லது 12 திட்டங்களுக்கு உடன்படுமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே அவர் இலங்கை வந்திருந்தார்” இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.**

2➤

# ஈஸ்டர் தாக்குதலுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குச் செலவிடப்பட்டுள்ளது!

## கொழும்பு மறை மாவட்ட சமூக மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர்



பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் பெற்ற உதவித் தொகையில் சுமார் 500 மில்லியன் ரூபா பாதிக்கப்பட்டவர்களுக்குச் செலவிடப்பட்டுள்ளதாக கொழும்பு மறை மாவட்ட சமூக மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூட் கிரிஷாந்த தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுக்காக பல்வேறு தரப்பினரிடம் இருந்து பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களுக்குக் கிடைத்த உதவித் தொகை எந்தவிதத்திலும் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்த அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த வலியுறுத்தியுள்ளார்

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2➤

# ஈஸ்டர் தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வந்த பணத்தைக் காணோம்!

## பேராயர் மீது மைத்திரி பாய்ச்சல்



“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நான் ஜனாதிபதியாக இருந்த காலப் பகுதியிலேயே நட்டஈடு செலுத்தி விட்டேன். இருந்தபோதும், அந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக பல்வேறு நாடுகள், பல்வேறு அமைப்புகளிடமிருந்து பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குப் பணம் செலுத்தப்பட்டது. அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது? அந்த விபரங்களைப் பேராயர் முன்வைக்க வேண்டும். ஆனால், அவ்வாறு கிடைத்த பணத்தில் ஒரு சதம் ஷரூபா கூட பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை.” - என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“ஒருவேளை இன்றிரவே ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எம்மால் வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாது. எனக்கு எதிராகத் தடையுத்தரவும், இடைக்காலத் தடையுத்தரவும் இருப்பதால் வேட்புமனுத் தாக்கலை தேர்தல் ஆணைக்குழு ஏற்காது. அதன் காரணமாக, ஆதரவாளர்கள் பற்றியும் நாடு பற்றியும் நாட்டின் எதிர்காலம் பற்றியும் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் அமைப்பாளர்களின் எதிர்காலம் பற்றியும் சிந்தித்தே எனது தலைவர் பதவியை இராஜிநாமா செய்தேன்.

அவ்வாறு பதவியை இராஜிநாமா செய்திருக்காவிட்டால் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களுக்கு துரோகம் இழைத்தவனாகிவிடுவோம். அதனால், வேட்பாளர்களுக்கு பாரதூரமான சிக்கலும் ஏற்படும். அதன் காரணமாகவே இராஜிநாமா செய்தேன். எனக்கு எதிராக இத்தனை

2➤

# ‘13’ உங்கள் அப்பன் வீட்டுச் சொத்தா?

## சஜித் மீது பொன்சேகா சீறுகிறார்



“நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவேன் எனக் கூறும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வடக்கு மற்றும் தெற்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். 2➤

# சம்பள பிரச்சினைக்கு தீர்வு கோரி நாடு முழுவதிலுமிருந்து ஆசிரியர்கள் ஜூன் 26 இல் கொழும்பிற்கு வரவுள்ளார்கள்

## தொழிற்சங்கக் கூட்டணியின் பிரதிநிதி ஜோசப் ஸ்டாலின் தகவல்



ஜூன் 26 ஆம் திகதி காலை 11 மணியளவில் சுகவீன விடுமுறையின் கீழ் அனைத்து ஆசிரியர்களும் அதிபர்களும் கொழும்புக்கு வரவுள்ளனர் என ஆசிரியர் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கக் கூட்டணியின் பிரதிநிதி ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் மேற்குறித்த தினத்தன்று அனைத்து ஆசிரியர்களும் அதிபர்களும் கொழும்புக்கு வரவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## 13 உங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், பெயர் குறிப்பிடாது மறைமுகமாக சஜித் பிரேமதாஸ மீது சரமாரியாக அவர் சபையில் சொற்கணைகளைத் தொடுத்தார்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது அப்பன் வீட்டு சொத்து அல்ல எனவும் அவர் சாடினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய பொன்சேகா மேலும் கூறியவை வருமாறு-

"நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு எதிரணி பிரதம கொறடாவிடம் நேரம் கோரி இருந்தேன். எனக்கு நேரம் ஒதுக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் பதிலளித்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தலின்போது சஜித்துக்குச் சார்பாக வேலை செய்வீர்களா எனவும் வினவினார். இறுதியில் எனக்கு நேரம் வழங்கவில்லை. எனினும், ஆளுங்கட்சியிடம்பேசி நேரத்தைப்பெற்றுக்கொண்டேன்.

நாம் மக்களுக்குச் சாராயம் கொடுத்து அரசியல் நடத்துவதில்லை. ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதும் கிடையாது. கொழும்பில் உள்ள கசினோக்காரர்களிடம் காசு வாங்கி பாடசாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும் பொருட்களை வழங்குவதும் கிடையாது.

இப்படி செய்பவர்கள்தான் நாட்டின் தலைவராகப் பார்க்கின்றனர். கட்சித் தலைவர் என்பதற்காக ஆட்சி அதிகாரத்தை வழங்கும் முடிவை எடுத்தால் அது நாட்டுக்கே பாதகமாக அமையும்.

தந்தை ஜனாதிபதியாக இருந்தார் என்பதற்காக மகன்களை ஜனாதிபதியாக்க முடியாது. இது தொடர்பில் மக்கள் சிந்தனையுடன் செயற்பட வேண்டும். பொருட்களைப் பகிர்பவர்களை அல்ல சிறந்த தலைவரையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற கனவில் இருப்பவர்கள், வடக்குக்குச் செல்கின்றனர். 13 வழங்கப்படும் என உறுதியளிக்கின்றனர். தெற்கில் யார் எதிர்த்தாலும் 13 வழங்கப்படுமாம். அப்படி வழங்குவதற்கு 13 என்ன அப்பன் வீட்டுச் சொத்தா?

நாட்டை ஐக்கியப்படுத்துவதற்காகவே படையினர் உயிர்த் தியாகம் செய்தனர். எனவே, வடக்கும், தெற்கும் என அனைத்து பகுதியிலும் உள்ள மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும். தெற்கில் உள்ளவர்கள் வடக்கில் உள்ள வாக்குகளுக்காக இங்கிருந்து சென்று உறுதியளிக்கின்றனர்.

வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள், இதைப் பெற்றுக்கொடுப்போம் எனக் கூறி நாடாளுமன்றம் வருகின்றனர். 13 ஐ வழங்குவோம் என வாக்குக் கேட்கும் வேட்பாளர்களுக்கு தெற்கு மக்களும், வடக்கு மக்களும் வாக்களிக்கக்கூடாது" - என்றார். (05)

## ஈஸ்டர் தாக்குதலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியலில் மிகவும் வங்குரோத்து நிலையில் உள்ளவர் எனவும் தனது வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக ஊடகங்கள் இவ்வாறான பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக பல்வேறு வர்த்தக சமூகங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல்வேறு தரப்பினரால் கர்தினால் அவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

## இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது இந்திய வெளியுறவு அமைச்சர் வந்து சென்றுள்ளதன் அடுத்த நீட்சியாக ஒகஸ்ட் மாதம் இந்தியப் பிரதமர் இலங்கை வரவுள்ளார். அப்படியென்றால் இந்திய வெளிவிவகார அமைச்சர் இப்போது எதற்காக இலங்கை வருகிறார்? என்னென்ன திட்டங்களைப் பற்றி பேசப்பட்டுள்ளன? என கேள்வி எழுப்பிய போது, சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த இதற்கு பதிலளிக்கையில், "இது தொடர்பில் என்னால் தற்போது எந்தத் தகவலையும் வழங்க முடியாது. ஏனென்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. நான் அதை வெளியுறவு அமைச்சிற்குதெரியப்படுத்தி இதற்கான பதிலை இன்று தருவதற்கு முயற்சிக்கின்றேன்" என்றார். (ரென-68)

## ஈஸ்டர் தினத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள் என்றால் அதுதொடர்பில் ஒவ்வொருவரும் சிந்தித்துப் புரிந்துகொள்ள வேண்டும். எனக்கு எதிராக 400 வழக்குகள் இருப்பதால், உலக கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிவாகியுள்ளேன் என்றே கருதுகின்றேன்.

பேராயரின் தலைமைத்துவத்தில் எனக்கு எதிராக 400 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவுகளுக்கும் கை, கால்களை இழந்தவர்களுக்கும் நட்டஈடு செலுத்துமாறு இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

ஆனால், நான் ஜனாதிபதியாக இருந்தபோது, பாதிக்கப்பட்ட சகலருக்கும் நட்டஈடு செலுத்தினேன். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னர் கத்தோலிக்க அமைப்புகள், உலக நாடுகள், பல்வேறு அமைப்புகள், இலங்கையிலுள்ள உயர்மட்ட வியாபாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து கர்தினாலுக்கு பணம் கிடைத்தது. அந்தப் பணத்துக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான விபரங்களை தயவு செய்து கர்தினால் முன்வைக்க வேண்டும். எனக்கு இவ்வளவு பணம் கிடைத்தது. அவற்றை இவ்வாறு பகிர்ந்தளித்து விட்டேன் என்று பேராயர் பெயர் விவரங்களை அறிவிக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு கிடைத்த பணத்தின் ஒரு சதம் ஷரூபா கூட பாதிப்படைந்தவர்களுக்கு வழங்கவில்லை. அவ்வாறு இருக்கையில், நான் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச நிதியைப் பெற்றுக்கொடுத்தும் என்னை நட்டஈடு செலுத்துமாறு தெரிவித்து எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள். இதுவே தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையாகும்" - என்றார். (05)

## சம்பள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்வி அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்ததாக அவர் கூறினார். இது தொடர்பான கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்காவிட்டால், க.பொ.த சா-தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளிலிருந்து விலக வேண்டியேற்படும் எனவும் ஜோசப் ஸ்டார்லின் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-69)

## எரிபொருள் விநியோகத்தில் மோசடி!

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு சுமார் 31,021 மில்லியன் ஷரூபா மேலதிக தரகு பணமாக செலுத்தப்பட்டமையினால் பொதுமக்களுக்கு எரிபொருளுக்கான மேலதிகச் செலவு ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் அறிக்கை மற்றும் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் அழைத்த போதே இந்த விடயங்கள் தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதிகாரிகள் செலுத்திய இந்த கட்டணத்தால் தற்போது ஒக்டேன் 92 பெட்ரோல் லீட்டருக்காக 5 ரூபாய் 85 சதமும், ஒக்டேன் 95 பெற்றோல் லீட்டருக்காக 7 ரூபாய் 50 சதமும், ஒட்டோ டீசல் லீட்டருக்காக 5 ரூபாய் 80 சதமும், சூப்பர் டீசல் லீற்றருக்காக 6 ரூபாய் 96 சதம் பணமும் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக இதன்போது தெரியவந்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் இது போன்ற மோசடிகளில் ஈடுபடுவது குறித்து அதிருப்தியை வெளிப்படுத்திய கோப் குழுவின் உறுப்பினர்கள், இந்த மோசடிகளுக்கு கூட்டுத்தாபனத்தின் உள்ளக அதிகாரிகளே பொறுப்பு கூற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகரிப்பு

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களுக்குள் ஒரு மில்லியனை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின்படி, இந்த மாதத்தின் முதல் 19 நாட்களில் 69,825 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

மேலும், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 966,825 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (04)

## குருநகர் சோதனையில் ஐவர் பொலிசாரால் கைது!

யாழ்ப்பாணம் - குருநகரில் பொலிஸார் நடாத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின்போது ஐவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டது.

பொசன் தினத்தில் அரச மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவரும், கஞ்சா கலந்த மாவாவுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது 19 சாராய கால் போத்தல்கள், 70 மில்லிகிராம் ஹெரோயின், 80 கிராம் கஞ்சா கலந்த மாவா என்பன கைப்பற்றப்பட்டன. (01)






செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வடக்கு மாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் பொருத்தும் முகாம் நிறைவு




யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் பொருத்தும் முகாம் நேற்று முன்தினம் (19) நிறைவடைந்தது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் இந்த முகாம் நிறைவுறுத்தும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பங்கேற்ற வடக்கு மாகாண ஆளுநரும், யாப்பாணத்திற்கான இந்தியத் துணைத் தூதுவரும் செயற்கை அவயங்கள் தயாரிக்கும் முறைகளைப் பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து செயற்கை அவயங்கள் தயாரிப்பில் ஈடுபட்டவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 352 மாற்றுத் திறனாளிகளுக்கு 366 புதிய செயற்கை அவயங்கள் தயாரித்து வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றைப் பராமரிக்கும் முறை தொடர்பான பயிற்சிகளும் இந்த விசேட முகாம் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், "மக்களின் தேவை அறிந்து இந்திய அரசாங்கம் தனது கடமைகளை முன்னெடுத்து வருகிறது. அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் மூன்றாவது தடவையாகவும் இந்திய அரசாங்கம் இந்த செயற்கை அவயங்களை வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது. இதற்காக இந்திய அரசாங்கத்திற்கும், அந்நாட்டு மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் மாற்றுத் திறனாளிகளுக்கான போக்குவரத்துச் சேவையையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. அவர்களின் பயணங்களை இலகுப்படுத்தும் வகையிலான பஸ் வண்டிகள் இறக்குமதி செய்யப்பட வேண்டியுள்ளன.

இந்த விடயம் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகளையும் பெற்றுக்கொடுக்கவும் வேண்டியுள்ளது" எனத் தெரிவித்தார். (01)

## பீஜிங்கில் நடைபெறும் சர்வதேசக் கருத்தரங்கில் பிரதம கணக்காளர் சூடாமணி அகிலன்



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் வளர்முக நாடுகளுக்கிடையிலான நிலைபேறான அபிவிருத்தி சர்வதேசக் கருத்தரங்கில் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் ஜூலை 3 வரை பங்குபற்றுதற்கு பிரதம கணக்காளர் சூடாமணி அகிலன் தெரிவுசெய்யப்பட்டு சீனாவிற்கு பயணமாகியுள்ளார்.

இலங்கைக் கணக்காளர் சேவையில் 17 வருட அனுபவம் கொண்ட இவர் 5 வருடமாக அகில இலங்கை கணக்காளர் சேவையில் தரம் 1 இல் பணியாற்றி வருகிறார்.

குறித்த பயிற்சி நெறிக்கு இலங்கையில் இருந்து பங்குபற்றுவதற்கு தெரிவாகிய 8 பதவி நிலை ஆளணியினரில் இவர் மட்டுமே ஒரேயொரு தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்கங்களில் 10 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி, தற்போது பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள வளிமண்டலவியல் திணைக்களத்தின் பிரதம கணக்காளராகப் பொறுப்பு வகிக்கிறார்.

இவர் யா.நல்லூர் சென்பெனடிக் றோ.க.த.க மற்றும் யா.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழையமாணவருமாவார். (04)






## உள்ளூர் வளங்களை பயன்படுத்தி உற்பத்திகளை ஊக்குவிக்கும் திட்டம்

(எம்.எம்.றம்ஸீன்)

"வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் அதிகளவான இயற்கை வளங்கள் காணப்படுகின்றன. சுற்றுச் சூழலைப் பாதுகாத்துக்கொண்டு உள்ளூர் வளங்களை அதி உச்சத்தில் பயன்படுத்தி நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள உள்ளூர் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன" என்று கோறளைப்பற்று வாகரை உதவி பிரதேச செயலாளர் அர்ச்சனா புவேந்திரன் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நிகழ்வுகள் வாகரைப்பிரதேச செயலகத்தின் முன்றலில் இடம்பெற்றன.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் நிதி அனுசரணையில், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவித்து சந்தைப்படுத்தும் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

இந்த பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளின் விற்பனை ஊக்குவிப்பு நிகழ்வுகளில் வாகரைப் பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஏ. சுதர்ஷன் உட்பட இன்னும் பல அதிகாரிகள், பொதுமக்கள், கிராம மட்டக் கூட்டுறவுச் சங்கங்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சூழல் சுற்றாடல் ஆர்வலர்கள் கூட்டுறவு அமைப்பின் உள்ளூர் உற்பத்தியாளர்கள இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் வெளிக்கள அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் இலகுவாக வென்றது அவுஸ்திரேலியா!



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்றில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியா அணி டக்வெர்த் லுயிஸ் முறையில் (டிஎல்எஸ்) வெற்றியீட்டியது.

மேற்கிந்தியத் தீவுகளின் அன்டிகுவாவில் இன்று (21) நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்பிற்கு 140 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பங்களாதேஷ் அணித் தலைவர் நஜ்முல் ஹுசைன் சான்டோ 41 ஓட்டங்களையும், தௌஹீத் ஹ்ரிடோய் 40 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

அவுஸ்திரேலியா அணியின் பட் கம்மின்ஸ் 3 விக்கெட்டுக்களையும், அடம் சம்பா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பட் கம்மின்ஸ் 17 வருடங்களின் பின்னர் அவுஸ்திரேலியா அணி சார்பில் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ஹட்ரிக் விக்கெட்டுக்களைப் பெற்றுக்கொண்டார். இதற்கு முன்னர் 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற முதலாவது ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் போது பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில் பிரெட் லீ ஹட்ரிக் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

141 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி 11.2 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 100 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. மீண்டும் போட்டியை ஆரம்பிக்க முடியாதளவுக்கு மழை பெய்ததனால், அத்துடன் நிறுத்திக்கொள்ள நடுவர்கள் தீர்மானித்தனர். டிஎல்எஸ் முறைப்படி 11.2 ஓவர்களில் 73 ஓட்டங்கள் போதுமென்ற நிலையில் அவுஸ்திரேலியா 28 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியா அணியின் டேவிட் வோர்னர் ஆட்டமிழக்காது 53 ஓட்டங்களையும், டிராவிஸ் ஹெட் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில் ரிஷாத் ஹுசைன் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பட் கம்மின்ஸ் தெரிவு செய்யப்பட்டார். (04)

# ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தியது இந்தியா!



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்றில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணி 47 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் பாபர்டோஸில் நேற்று (20) நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்பிற்கு 181 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சூர்யகுமார் யாதவ் 53 ஓட்டங்களையும், ஹர்திக் பாண்டியா 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஆப்கானிஸ்தான் அணியின் பாஷ்ரூக்கி, ரஷிட் கான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

182 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது.

அந்த அணி சார்பில் ஹஸ்மதுல்லா ஓமார்சாய் 26 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டார். இந்திய அணியின் பந்துவீச்சில் பும்ரா, அர்ஷ்தீப் சிங் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் சூர்யகுமார் யாதவ் தெரிவு செய்யப்பட்டார். (04)

# மொட்டுவின் பதுளை உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவு



பதுளை மாவட்டத்தின் ஊவா பரணகம மற்றும் எல்ல பிரதேச சபைகளின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சுயேச்சை உறுப்பினர்கள் பலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டனர்.

இதன் பிரகாரம், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எல்ல பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்த நிமல் ரஞ்சித் வீரசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களான சமந்த கபில ரத்நாயக்க, ஹேமாவதி குமாரிஹாமி மற்றும் பாரத ரணசிங்க ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

அதேபோன்று எல்ல பிரதேச சபையின் சுயேச்சை உறுப்பினராக இருந்த பி. சுரேஷ் போலவே, ஊவா பரணகம பிரதேச சபையின் உப தவிசாளர் ஆர்.டி குணபால, உறுப்பினர் டி.எம். கருணாதாச மற்றும் ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் டி.ஐ. ரத்னபால ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர். (05)

# மகனைக் கொடூரமாகத் தாக்கி வீடியோவை மனைவிக்கு அனுப்பிய கணவன் சிக்கினார்

ஊவா பரணகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பஹா தோட்டத்தில் தனது 4 வயது மகனைத் கொடூரமாகத் தாக்கும் காணொளியை வெளிநாட்டில் உள்ள தனது மனைவிக்கு அனுப்பி வைத்த குற்றச்சாட்டில் 26 வயதுடைய தந்தை நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று ஊவா பரணகம பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பஹா தோட்டம், மேல் பிரிவு, உடுபுஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் மனைவி கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றார் எனவும், கணவனுக்குத் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தாத காரணத்தால் குழந்தையை அடிக்கும் காட்சியை வீடியோவாகப் பதிவு செய்து இமோ தொழில்நுட்பம் மூலம் மனைவிக்கு அனுப்பி வைத்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அவர் அந்த வீடியோவை சமூக வலைத் தளங்களில் வெளியிட்டார் எனவும், அதன்படி அவர் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தாக்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தையும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளது எனவும், அக் குழந்தையை வெலிமடை சட்ட வைத்திய அதிகாரியிடம் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேகநபரை வெலிமடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் ஊவா பரணகம பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (05)

# ஹஜ்ஜுப்பெருநாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கிரிக்கெட் தொடர்



(எம்.ஏ.றமீஸ்)

புனித ஹஜ்ஜுப் பொருநாளை முன்னிட்டு சாய்ந்தமரு பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கடினப் பந்து நாபீர் பௌண்டேசன் சம்பியன் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி சாய்ந்தமருது பொலிவேரியன்பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அணிக்கு 11 வீரர்களைக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட 10 ஓவர்களைக் கொண்டதாக இச்சுற்றுப் போட்டி இடம்பெற்றது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு நேற்று (20) மாலை இடம்பெற்றது. தொடரின் சம்பியன் கிண்ணத்தை சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினர் கைப்பற்றினர்.

இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு கல்முனை ஜீனியர்ஸ் விளையாட்டுக் கழகமும், சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகமும் தெரிவாகியிருந்தன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை ஜீனியர்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கற்றுக்களை இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

அந்த அணியின் வீரர் ஏ.அப்காம் தனது அணிக்காக அதிக பட்சமாக 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். கல்முனை பிளாஸ்டர் அணியின் பந்து வீச்சாளரான எம்.மபாஸ் 10 ஓட்டங்களுக்கு மூன்று விகெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

73 என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட வெற்றி இலக்கினை 8.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து அடைந்து, 6 விக்கற்றுகளால் வெற்றி பெற்றனர்.

சாய்ந்தமருது பிளாஸ்டர் அணி சார்பாக எம்.ஆபாக் 26 ஓட்டங்களையும், எம்.சஹீன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்நிகழ்வின்போது நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகத் தலைவரும் பொறியியலாளருமான கலாநிதி உதுமாண்கண்டு நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணத்தினையும் பணப் பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

அவர் தனது சொந்த நிதி மூலம் சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் அணியினருக்கு ஐம்பதாயிரம் பணப் பரிசும் பெறுமதி மிக்க வெற்றிக் கிண்ணமும் வழங்கி வைத்தார். இரண்டாமிடம் பெற்ற கல்முனை ஜீனியர்ஸ் அணியினருக்கு 25 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் அவர் வழங்கியிருந்தார்.

# கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்திற்கு கற்பித்தல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளிற்கு நீண்ட நாள் தேவையாகஇருந்த உபகரணங்கள் 2008 க.பொ.த.சாதாரண தர பிரிவு மாணவர்களால் வழிநடாத்தப்படும் பஹ்ரியன் பிரீஸ் அமைப்பினாரால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம்.பைசால், ஆசிரியர்களான ஏ.ஆர்.எம்.முஸராஜித் , யூ.எல்.ரியால், பழைய மாணவர் சங்கச் செயலாளர் யூ.எல்.ஹாஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கார்மேல் பற்றிமாவில் சின்னம் சூட்டுவிழா!




(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசியக் கல்லூரியில் சிரேஷ்ட மாணவ தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ.ரெஜினோல்ட் தலைமையில் நேற்று முன்தினம் (19) புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக பற்றிமா கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்சகோதரர் ஸ்ரிபன் மத்தியூ கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் ரங்கா சந்ரசேன மற்றும் சிறப்பு அதிதிகளாக முன்னாள் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆர். சுகிர்தராஜன், கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி பி.திருநாவுக்கரசு, கல்முனை வலய ஆசிரிய ஆலோசகர் ரி.ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இவ்வருடத்திற்காக புதிதாக தெரிவு செய்யப்பட்ட சிரேஷ்ட மாணவத் தலைவர்களுக்கு சின்னம்சூட்டும்நிகழ்வுடன், கடந்தவருடம்தெரிவு செய்யப்பட்டு சிரேஷ்ட மாணவத்தலைவர்களாக கடமையாற்றிய மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

மாணவர் தலைவர்களுக்கான பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.



# சோறு மற்றும் வெற்றிலை உண்கின்ற மக்கள் இன்னமும் மஹிந்த ராஜபக்ஷவுடனேயே உள்ளனர்


## இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவிப்பு



69 இலட்சம் வாக்குகளை தமது பொக்கெட்டில் போட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் பல்வேறு தரப்பினர் தயாராக இருக்கின்ற போதிலும், சோறும் வெற்றிலையும் உண்ணுகின்ற இந்நாட்டு மக்கள் இன்னமும் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனேயே இருப்பதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும்அவர்தெரிவித்ததாவது: சோறும்வெற்றிலையும் உண்ணும் இந்நாட்டு மக்கள் இன்னமும் ஐந்தாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனேயே உள்ளனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முப்பது வருட யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர் ஆவார். இந்த நாட்டில் பெரும் அபிவிருத்தியை உருவாக்கியவரும் அவரே. சமீபத்திய சில சம்பவங்களால் எமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் சிறியதொரு பின்னடைவு ஏற்பட்டிருந்தது. ஆனால், இப்போது அவர்கள் நம்மை விட வேகமாக முன்னேறி வருகிறார்கள். எங்களுக்கு சிறிதளவிலாவது

பின்னடைவு ஏற்பட்டது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால், 69 இலட்சம் வாக்குகளில் 19 இலட்சம் குறைந்தாலும் 50 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வசமே இன்னும் உள்ளன. (ரென-66)



## ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க 2 லட்சம் வாக்காளர்கள் அதிகரிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை 2024 ஆம் ஆண்டுக்குரிய புதிய வாக்காளர் பட்டியலின் கீழ் நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதன்படி, புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணி தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், ஜூலை 15 ஆம் திகதிக்குள் இறுதிப் பட்டியலில் கையெழுத்திட ஆணைக்குழு செயல்பட்டு வருகின்றது.

2023 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை விட இந்த ஆண்டு புதிய வாக்காளர்கள் இரண்டு லட்சம் பேர் அதிகரித்திருப்பார்கள் என தேர்தல் ஆணைக்குழு கணித்துள்ளது. ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் அடுத்த மாதம் 17 ஆம் திகதி முதல் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைப்பதுடன், ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பை அந்த மாத இறுதியில் ஆணைக்குழு வெளியிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரென-64)

## கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவை ஜூலை 8 முதல் 14 வரை நடத்த தீர்மானம்

coliff
Colombo International
Film Festival

கொழும்பு சர்வதேச திரைப்பட விழாவை ஜூலை 8 ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை கொழும்பில் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம்மற்றும்இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் முயற்சியின் கீழ் இந்த திரைப்பட விழாவை நடத்துவதற்காக ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர்ஹறின்பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஈரான், பிரான்ஸ், இந்தியா, தென் கொரியா, சீனா, ஜப்பான், ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகளை வென்றுள்ள திரைப்படங்களை இலங்கை ரசிகர்களுக்கு கண்டு களிக்கும் வாய்ப்பை வழங்குவதும், இலங்கையை தெற்காசியாவின் சுற்றுலா கேந்திரமாக மாற்றுவதும் இதன் நோக்கமாக கருதப்படுகின்றது. (ரென-67)






# பிறந்தநாள் கொண்டாட்டத்தைத் தவிர்த்து பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்!

## தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் அறிவிப்பு



தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சியில் விசச்சாராயத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை, தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு தனது கட்சியின் மாவட்ட செயலாளருக்கு, விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக, இந்த கள்ளசாராய மரணங்கள் அரசு நிர்வாகத்தின் அலட்சியத்தையே காட்டுவதாக, அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தோரின் எண்ணிக்கை 49 ஆக உயர்ந்துள்ளது. மேலும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரில் 30 பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 114 பேர் கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சேலம், புதுச்சேரி என பல்வேறு மருத்துவமனைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். சிறப்பு மருத்துவக்குழுவினர் மற்றும் தாதியர்கள் குழு 24 மணி நேரமும் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

கள்ளச்சாராய விற்பனையை தடுக்க சிறப்பு தனிப்படை அமைககப்பட்டுள்ளதாக ஆட்சியர் பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், தமிழக வெற்றிக்கழகத்தின் பொதுச்செயலாளர் ஆனந்த் கள்ளச்சாராய விவகாரம் தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் அக்கட்சியின் தலைவர் விஜய்யின் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

“தனது பிறந்த நாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து, கள்ளக்குறிச்சியில் உயிரிழந்தவர்கள் மற்றும் சிகிச்சை பெறுவோரின் குடும்பங்களுக்குத் தேவையான அனைத்துஉதவிகளையும்நேரடியாகச் சென்று உடனே வழங்கிட அனைத்துத் தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட நிர்வாகிகளுக்கும் தளபதி விஜய் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

எனவே தலைவர் அவர்களின் உத்தரவின்படி, கழக நிர்வாகிகள், கள்ளக்குறிச்சியில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து அவர்களுக்குத்தேவையான மருத்துவ உதவி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட தேவையான உதவிகளை உடனடியாகச் செய்ய வேண்டும்எனக்கேட்டுக்கொள்கிறேன்” என கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் தனத என்ஸ் பக்கத்தில் பதிவினை இட்டு தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு நாளை பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2024இல் வெளியிடப்பெற்றது.